# வாக்குமூலம்

## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.

**தேதி: 17.03.2026**

**OS. No. 26/2023**

**வழக்கு சாட்சி DW.1– சசிகலா, க/பெ. தியாகராஜன்**

<u>**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**</u>

வாதி தரப்பில் என்ன பரிகாரம் கோரியுள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தின் நான்குமால் விபரம் பற்றி எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது . நான் அப்துல அஜிஸ் மீது அசல் வழக்கு எண் . 209/2008 என்ற வழக்கு தொடுத்தேன் என்றால் சரிதான் . நான் அஜித் பாய் மீது வழக்கு தொடுத்தேன். அஜித் பாயின் அப்பா பெயர் உசேன் பாய் . அஜித் பாய் மீது 103/17 என்ற பட்டா எண் தொடர்பாக நான் வழக்கு தொடுத்தேன். அசல் வழக்கு எண். 209/2008 ல் சர்வே எண்.100/4 தொடர்பாக தொடுக்கப்பட்ட வழக்கு என்றால் சரிதான். என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பி .வா.சா.ஆ.1 ஆவணம் சர்வே எண் .100/4 தொடர்புடையது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் 103/17 என்ற சர்வே எண் எங்கும் குறிப்பிடவில்லை என்றால் எனக்கு அதுகுறித்து தெரியவில்லை. 103/17 என்ற சர்வே எண் தொடர்பாக பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்றாலும் , அதனால்தான் தெரியவில்லை என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

பி.வா.சா.ஆ.1 ஆவணம் யார், யாருக்கு எழுதிக் கொடுத்தது என்றால் மணி நாதன் , இலட்சுமியம்மாளுக்கு எழுதிக்கொடுத்த ஆவணம். பி.வா.சா.ஆ.1 ஆவணப்படி மணிநாதன் , கந்தையாவிற்கு பி .வா.சா.ஆ.1 ஆவணம் எழுதிக்கொடுத்த ஆவணம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணப்படி

10.02.1982 பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து முகமது உசேன் வாய்க்காரலாக கந்தையாவிற்கு கொடுத்ததாக சங்கதி சொல்லப்பட்டுள்ளது என்றால் அதுகுறித்து எனக்குத் தெரியாது. முகமது உசேனுக்கு சொந்தமான சொத்தை எந்தவிதமான கிரைய ஆவணமும் இல்லாமல் வாய்க்காரலாக கொடுத்தாக சொல்லி பி .வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சாட்சி கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாமல் அவரது இஸ்டம்போல் பதிலளித்தார் . என்னிடம் காட்டப்படும் பி .வா.சா.ஆ.2 ஆவணத்தில் சொத்து விபரத்தில் சர்வே எண் .100/4 தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுகுறித்து எனக்குத் தெரியவில்லை . பி.வா.சா.ஆ.2 ஆவணத்தல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் நான்குமால் விபரம் தெரியுமா என்றால் தெரியாது. பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 ஆவணத்தின் சொத்து விபரங்களில் நான்குமால் விபரங்கள் ஒரே நான்குமால் விபரங்கள் தான் காட்டப்பட்டுள்ளது என்றால் எனக்கு அதுகுறித்து தெரியவில்லை . இலட்சுமியம்மாள் அவரது சொத்தை உயிலோ அல்லது செட்டில்மென்ட் ஆவணம் ஏதேனும் எழுதி வைத்துள்ளாரா என்றால் இல்லை.

எனது அம்மா இறந்த தேதி எனக்கு நினைவில்லை . என்னுடன் பிறந்தவர்கள் என்னைச் சேர்த்து மொத்தம் 4 பெண்கள், 2 ஆண்கள் ஆவர் . முதல் நபர் பெயர் ராமர்திலகம் அவர் இறந்து விட்டார், 2 வது ரெங்கநாயகி, 3 வது நான்( சசிகலா– 1 ம் பிரதிவாதி), 4 வது மாலதி, 5 வது சதாசிவம் (இறந்துவிட்டார்), 6 வது சந்திரசேகர் (இறந்துவிட்டார்). மேற்சொன்ன எனது உடன் பிறந்த சகோதர, சகோதரிகளுக்கு வாரிசுகள் உள்ளது . நான் தாக்கல் செய்த அசல் வழக்கு 209/2008 என்ற வழக்கில் எனது சகோதர, சகோதரிகளோ அவர்களது வாரிசுகளோ தரப்பினர்கள் இல்லை என்றால் சரிதான் . எனது அம்மா அவரது சொத்தை எனக்கு ஒதுக்கிவிட்டதாக சொல்லியுள்ள நிலையில் அதுகுறித்த ஆவணங்கள் ஏதேனும் அசல் வழக்கு 209/2008 மற்றும் இந்த வழக்கில் என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால்

இல்லை. சொத்தை எனக்கு என் அம்மா ஒதுக்கியது சம்பந்தமாக ஆவணம் எதுவும் எழுதப்பட்டதா என்றால் இல்லை. எனது அம்மா பெயரில் உள்ள கிரைய ஆவணங்கள் சர்வே எண் .103/17 தொடர்புடைய ஆவணங்கள் அல்ல என்றால் தெரியவில்லை.

**(சாட்சி குறுக்கு விசாரணை கேள்விக்கு முறையாக பதிலளிக்க மறுத்த காரணத்தாலும், பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை என்பதாலும் குறுக்கு விசாராணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது )**

Taken down by me in open court and read over to the witness and acknowledged by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.03.17 16:06:14 +0530

District Munsif cum Judicial Magistate No.I,
Kodaikanal.